# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1949/41 - 2016 ජනවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.01.14

*1949/ 41 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் உப உறுப்புரை (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சருக்கு உரித்தாக்கப்படும் கடமைகளும் பணிகளும் 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கீழ்க்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு அமுல்படுத்தப்படல் வேண்டுமென்பது அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின் உப உறுப்புரை (2) இன் பிரகாரம் என்னால் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜோன் ஈ. ஏ. அமரதுங்க பா. உ.,
சுற்றுலா அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, சனவரி 06.

**அட்டவணை**

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கடமைகளும் பணிகளும்**

1. அமைச்சரின் ஆலோசனையின் பேரில் சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் சார்ந்த கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.
2. நாடு முழுவதிலும் சுற்றுலாத்துறைசார்ந்த நடவடிக்கைகளில் சட்டபூர்வமாக ஈடுபட்டுள்ள முறைசாராத் துறைசார்ந்த நிறுவனங்களுக்கும் ஆட்களுக்கும் உத்தேச பதிவு செய்வதற்கான செயன்முறையின் வெற்றி நிலையை உறுதி செய்தல், (உதாரணமாக : சுற்றுலா விடுதிகள், உணவகங்கள், மதுபானம் அருந்தகங்கள், வழிகாட்டிகள், சுற்றுலா முகவர்கள் முதலியன.) ஆகையால், 2016, யூன் மாதமளவில் அவை முறைசார் நிறுவனங்களாக மாற வேண்டும் என்பதுடன், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து இச்செயன்முறையை நெறிப்படுத்துதல்.
3. உள்நாட்டு சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்.
4. கிறிஸ்தவ மத அலுவல்கள் சார்ந்த பிரதேச நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தலும்.
5. சுற்றுலா விடுதிகளின் அபிவிருத்தியும் ஒழுங்குறுத்துகையும் சுற்றுலா விடுதிகளை வகைப்படுத்தல் சார்ந்த சகல அலுவல்களும்.
6. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவல்களை மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும் மதிப்பீடு செய்வதற்கு அந்நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பொன்றைப் பேணுதலும் அலுவல்களின் விளைவுப்பெருக்கத்தை உறுதி செய்தலும்.
7. சுற்றுலாத்துறைக்கு அவசியமான மனிதவள அபிவிருத்தி சார்ந்த கருமங்கள்.
8. அமைச்சரினால் காலத்திற்குக்காலம் ஒப்படைக்கப்படக்கூடிய வேறேதேனும் கடமை அல்லது பணி.

1- 1097




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.